முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை!
அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர்
முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால
பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் ஆனி மாதம் 03 திகதி முதல்
சோபகிருது வருடம் ஆனி மாதம் 10 திகதி வரை
(18.06.2023 ஞாயிறு முதல் 25.06.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. உலகே வியக்க ஞானம் தரும்
உயர்வு நிறைந்த பாரதமே
பழக யாவர்க்கும் எளிமையோடு
பரோபகார பயபக்தி அருளும் தமிழகமே
2. தமிழகம் இந்தியா தன்னில்
தக்க சோபகிருது மிதுன திங்கள்
நேமமுடன் சூலதிகதி மேல்தச திகதிவரை
நடக்கும் நிகழ்வாக வருங்கால பலன்குறித்து ஆசி
3. ஆசிதனை அரங்க ஞானி கேட்க
அருளுவேன் அகத்திய மகரிஷியும்
வாசிகள் வென்ற ஞானிகளும்
வலம் வந்து இந்தியா தமிழகம் தன்னை
4. தன்னை பாதுகாக்கும் முயற்சியில்
தரும வழிகளைகாட்டி வருக
என்னவென்றும் கருதா விலகி
ஏற்கா அஞ்ஞான வழியில் மக்கள்
5. மக்கள் அதிகாரிகள் ஆளுமைஎன
மனம் பதைக்கா தீவினையை
தேக்கமின்றி செய்து வந்தால்
தேசமெங்கும் ஆபத்து அழிவுகள் பெருகி

6. பெருகி ஆளுமைக்கு பின்னடைவு
பெருநட்டம் பொருளாதார நலிவு
வருங்காலம் கேள்விக்குறியாகும்
வருவாய்க்கு மேலான அரசு கடன்கள்
7. கடன்கள் பெருகிக் கெடுபடி
கண்டதொரு அரசுத் துறைகள்
இடர்பட யாவற்றிலும் வரிச்சுமை
இணைசொல்லா வண்ணம் கூடி
8. கூடி மக்களுக்கு வதைகளும்
குடிநடத்த முடியா வறுமைக்கோடு எனும்
இடர்களும் பெருகி பின்னடைவு
இந்தியா தமிழகம் கண்டிடநேரும்
9. நேருமை கொண்டு ஞானவழி
நீதிமான் ஞானிகள் காட்டும்படி
வருமுலகில் மக்கள் அதிகாரிகள் ஆளுமை என
வணங்கி வர மாற்றம் காணும்
10. காணுமே பாதுகாப்பு மிக்கநல்
கண்ணியம் தவறா ஆளுமையாக
ஞானஆட்சிக் காலமாக மாறும்
ஞானிகள் வெளிப்பட மாற்றம் காணும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் ஆனி மாதம் **03**ம் நாள் **18.06.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் ஆனி மாதம் **10**ம் நாள் **25.06.2023** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

உலகமே வியக்கும் வகையிலே மக்களுக்கு ஞானத்தினை அருளும் வகையிலே உயர்வான நிலையை பெற்ற பாரத தேசமே எல்லா மக்களையும்

தம்மக்களாய் எண்ணி அன்பு காண்பிக்கும் பரோபகாரம் மிக்க தமிழகமே சோபகிருது வருடம் ஆனி மாதம் **03**ம் நாள் **18.06.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் ஆனி மாதம் **10**ம் நாள் **25.06.2023** ஞாயிற்றுக்கிழமை வரை நிகழவிருக்கும் நிகழ்வுகளை அவதார ஞானி ஆறுமுக அரங்க மகான் கேட்க அகத்திய மகரிஷி யானும் எதிர்கால பலனை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

சித்தர்கோன் அகத்திய மகரிஷி யானும் வாசி வென்ற ஞானிகளும் புனிதமான இந்த தேச மக்களுக்கு பாதுகாப்பாய் வலம் வருவதுடன் மக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ளும் விதமாக தருமத்தின் வழிகளை பலவாறாய் அறிவுறுத்தி வருகின்றார்கள் ஆனால் ஞானிகள் கூறுவதை சற்றும் கவனத்தில் கொள்ளாமல் தர்மத்தின் வழியில் இருந்து விலகி தருமத்தையும் தரும வழியையும் ஏற்றுக் கொள்ளாமல் அஞ்ஞான வழியில் மக்களும், மக்களை காக்கும் அதிகாரிகளும், ஆட்சியாளர்களும் சென்று தாம் தவறு செய்கிறோம் என்று மனம் பதற்றம் இல்லாமல் தீய செயல்களை தடையின்றி செய்து வந்தால் நாடெங்கும் இனி வரும்காலம் ஆபத்துகளும் அழிவுகளும் பெருகி ஆட்சிக்கு பின்னடைவு உண்டாகும். பெரும் நஷ்டங்கள் உண்டாகும், பொருளாதார பின்னடைவு உண்டாகும் வருங்காலமே கேள்விக்குறியாகி விடுமப்பா.

நாட்டினில் வருவாய்க்கு அதிகமாக செலவாகி அரசின் கடன்கள் அதிகமாகும். கடன்கள் பெருகி நிற்பதாலே கெடுபிடிகள் அதிகமாகி அரசின் எல்லா துறைகளிலும் இடர்கள், குறுக்கீடுகள் உண்டாகி முன்னேற்றம் வெகுவாக தடைபடும். அதை சரி செய்ய அரசு மேன்மேலும் வரி விதிப்பதாலே மக்கள் மீது சுமத்தப்படும் வரிச்சுமையும் அதிகமாகும் மக்கள் மீது அதிகமான வரி விதிப்பு செய்வதால் மக்கள் துன்பம் மிகுதியாகி குடும்பங்களை நடத்த முடியாமல் தவிப்பதோடு நாட்டினில் வறுமை அதிகமாகும்.

ஆகையினாலே நீதி தவறாத ஞானவழி காட்டி மக்களை வழிநடத்திக் காக்கும் முற்றுப்பெற்ற ஞானிகளை அதிகாரிகள், மக்கள், ஆட்சியாளர் என அனைவரும் ஞானிகளை வணங்கி தர்மத்தின் வழியை ஏற்று நடந்தால் பாதுகாப்பு மிக்க நல்ல ஆட்சி உருவாகும் அது ஞானஆட்சி காலமாக மாறும் ஞானிகள் வெளிப்பட்டு நாடு நல்ல நிலையையும் அடையும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–